# சொல் வகைகள்

## சொல் :-

பொருளை அறிந்து கொள்வதற்குக் கருவியாக இருக்கும் ஒலியே சொல்.

## சொல்லின் வகைகள் :-

சொல் **நான்கு** வகைப்படும். அவை :-

1. **பெயர்ச்சொல்**
2. **வினைச்சொல்**
3. **இடைச்சொல்**
4. **உரிச்சொல்**

**பெயர்ச்சொல்** :-

பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.

**சான்று** :- செல்வன்

செல்வி

ஆசிரியர்

மாணவன்.

**வினைச்சொல்** :-

செயலை, இயக்கத்தை, தொழிலை உணர்த்தும் சொல் வினைச்சொல் ஆகும்.

**சான்று** :- பேசு

படி

நட

எழுது.

## இடைச்சொல் :-

பெயர்ச்சொல், வினைச்சொற்களை இடமாகக் கொண்டு வருவதனால் இதனை இடைச்சொல் எனலாம்.

**சான்று** :- உணவும் உடையும்

நூலைப் படித்தான்.

## உரிச்சொல் :-

பெயர், வினைச்சொற்களைச் சார்ந்து, அவற்றின் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும்.

**சான்று** :- நல்லரசு

மெதுவடை

அடர்ந்தகாடு.

## வினாக்கள் :-

1. சொல் என்றால் என்ன?
2. சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. பெயர்ச் சொல் என்றால் என்ன? சான்று தருக.
4. வினைச் சொல் என்றால் என்ன?சான்று தருக
5. உரிச்சொல் என்றால் என்ன? சான்று தருக.
6. பின்வரும் சொற்களில் வினைச் சொற்களைக் கூறுக.

செல்வி, படி, ஆசிரியர், ஓடு, மெதுவடை, நட, பேசு.